17 MAR 2010

<u>சுருக்கம்</u>

துாத்துக்குடி மாநகராட்சி – விரிவாக்கம் – உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

**அரசாணை (நிலை) எண்.53** **நாள்:17.03.2010.**

**படிக்கப்பட்டன:**

1. அரசாணை (பத்தாண்டு) எண்.374, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.8.2008.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம். ந..க.எண்.51452/2004/எம்.3, நாள் 14.8.2009 மற்றும் 13.1.2010.

---

<u>ஆணை:–</u>

துாத்துக்குடி நகராட்சி, அதன் அப்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி, அப்படியே, அதாவது, 51 வார்டுகளுடன் துாத்துக்குடி மாநகராட்சியாக அமைக்கப்பட்டு, 5.8.2008 முதல் துாத்துக்குடி மாநகராட்சி செயல்படத் துவங்கியுள்ளது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், வேலுார் மற்றும் துாத்துக்குடி மாநகராட்சிகளுடன் முறையே இணைக்கப்பட கருதப்பட்டுள்ள பகுதிகளை உள்ளடக்கிய அவ்விரு மாநகராட்சிப் பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து பணிகள் குறித்தான அறிக்கைகளை, தொடர்புடைய சட்டப்பிரிவுகள், விதிகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றி அரசுக்கு அளிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், இவ்வாணைகளின் அடிப்படையில் இப்பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருமதி.மு.விஜயலெட்சுமி, சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டதாக குறிப்பிட்டு, சிறப்பு அதிகாரியின் அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

4. சிறப்பு அதிகாரி தமது அறிக்கையில், எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு துாத்துக்குடியை திட்டமிட்ட நகரமாகவும், முன்மாதிரி நகரமாகவும் மாற்றியமைக்க, துாத்துக்குடி மாநகராட்சியுடன், அய்யனடைப்பு, சங்கரப்பேரி, மாப்பிள்ளையூரணி, துாத்துக்குடி ரூரல், முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, கோரம்பள்ளம், மீளவிட்டான், புதுார் பாண்டியாபுரம் (துாத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்படுவதற்கு சம்மதம் தெரிவித்து இவ்வுள்ளாட்சி அமைப்புகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன), மற்றும் முள்ளக்காடு, ஆகிய 10 ஊராட்சிகளை, துாத்துக்குடி மாநகராட்சியுடன் இணைப்பது மிகவும் அவசியமான ஒன்றாக கருதப்படுகிறது எனவும், எனவே துாத்துக்குடி மாநகராட்சியுடன் மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து ஊராட்சிகளையும் ஒருங்கிணைத்து தக்க ஆணைகளை வெளியிடுமாறு சிறப்பு அதிகாரி தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

.2..

5. முள்ளக்காடு ஊராட்சி, மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள முத்தையாபுரம் ஊராட்சிக்கு மிக அருகில் உள்ளதாலும், இவ்வூராட்சியில் ஸ்பிக் தொழிற்சாலை, கனநீர் ஆலை போன்ற முக்கிய தொழிற்சாலைகள் அடங்கியுள்ளதாலும், இவ்வூராட்சி, தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமப் பகுதியில் அமைந்துள்ளதாலும், மாநகராட்சியுடன் இணையும் பொழுது உள்ளூர் திட்டக்குழும நிதியை கொண்டு மானியம் பெற்று சாலைகள், பூங்கா போன்ற இதர பணிகள் செய்ய இயலுமெனவும் சிறப்பு அதிகாரி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

6. தூத்துக்குடி மாநகராட்சிக்கான சிறப்பு அதிகாரியின் அறிக்கை குறித்து தொடர்புடைய அதிகாரிகளுடன் விரிவான விவாதம் மற்றும் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், அரசு, தூத்துக்குடி மாநகராட்சியுடன், அய்யனடைப்பு, சங்கரப்பேரி, மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, கோரம்பள்ளம், மீளவிட்டான், புதூர் பாண்டியாபுரம் ஆகிய ஊராட்சிகளும் மற்றும் சிறப்பு அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் முள்ளக்காடு ஊராட்சியும் இணைக்கப்படலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

7. விரிவாக்கப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் போதிய கால அவகாசம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி, அதனுடன் இணைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் பாதிக்கப்படக் கூடாது என்பவற்றை கருத்தில் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தற்போதைய உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக் காலம் 2011–ஆம் ஆண்டு முடிவடைந்தவுடன் விரிவுப்படுத்தப்பட்ட தூத்துக்குடி மாநகராட்சி அமைக்கப்படலாம் எனவும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

8. இவ்வாணைகளின் அடிப்படையில், தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 600 108.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர்,
பனகல் கட்டடம், சைதாப்பேட்டை, சென்னை – 600 015.
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி.
ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி.
தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வழியாக)

நகல்:–
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6, ந.நி.5, பேரூ.2, அ.ந.2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/03/2010.
பிரிவு அலுவலர்.

17/3/2010